**வெலிகேபொல பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 2020 மார்ச் 02 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 ஜுன் 30 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் வெலிகேபொல பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டிற்காக பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 12,424,970 மீளாய்வாண்டு வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | முன்னைய ஆண்டுகளிற்கான வருமானம் திரண்ட நிதியத்தின் மூலம் சீராக்கப்பட வேண்டும் | எதிர் வரும் ஆண்டு முதல் இவ்விடயம் தொடர்பாக விஷேட கவனத்துடன் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான அட்டுறு மோடார் வாகன திருத்த செலவு ரூபா 72,150 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆண்டுகளிற்கான செலவினை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும் | எதிர் காலத்தில் இக் குறைபாடுகளை தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ) | 02 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் நிதிக் கூற்றுக்கள் பிரகார மீதிகள் மற்றும் உபயோக பதிவேடுகள் பிரகார மீதிகளிடையில் ரூபா 2,040,512 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்படும் மீதிகள் உபயோக பதிவேட்டு மீதிகளுடன் இணங்க வேண்டும். | எதிர்வரும் ஆண்டு கணக்கு தயாரிக்கையில் இவ்வித்தியாசத்தை சரி செய்யவதாக அறிவிக்கிறேன். |

### 1.4 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைதுவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| | (i) நிதிப்பிரமாணம் 371(2)(இ) | 1988 ஆண்டு முதல் 2018 நவம்பர் வரை 176 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 2,802,620 ஆன முற்பணத்தை தீர்த்திருக்கவில்லை | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீண்ட காலமாக நிலவிவரும் இம் முற்பணத்தை தீர்க்க முடியாதுள்ளதால், மேலும் கண்டறிவதாக அறிவிக்கிறேன். |
| | (ii) நிதிப்பிரமாணம் 571 | 1996 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரையான காலத்திற்குரிய ரூபா 106,721 ஆன டென்டர் வைப்புக்கள் மற்றும் நாநாவித வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | நிதிப்பிரமாணம் பிரகாரம் செயற்பட வேண்டும். | சந்தர்பத்திற்கு ஏற்றவாறு இத் தொகையை வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுப்பததாக அறிவிக்கிறேன். |
| **(ஆ)** | **பொது நிர்வாக சுற்றறிக்கை** | | | |
| | (i) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 பந்தி | சபைக்கு சொந்தமான 03 வாகனங்களின் எரிபொருள் பாவனை பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எரிபொருள் பாவனை பரிசோதனையை வரைவில் மேற்கொள்வதாக அறிவிக்கிறேன். |
| | (ii) 2018 ஜனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஆளணியினரிற்காக வருடாந்தம் கைச்சாத்திட வேண்டிய செயலாற்றுகை உடன்படிக்கையை கைச்சாத்திட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை | சுற்றறிக்கை பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ) | 2017 ஜுலை 25 ஆம் திகதிய 02/2017 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை | நிறுவன பொறுப்புக்களின் வெளியீட்டுடன் தொடர்பான வெளியீட்டு சுட்டிகள் மற்றும் முக்கிய செயலாற்றுகை சுட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் உரிய சுட்டிகளை இனங்காண வேண்டும். | ஏற்பட்டுள்ள பழவீனங்கள் எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2018 ஜுலை 19 ஆம் திகதிய 2018/இ-உள்ளூராட்சி 01 ஆம் இலக்க உள்ளூராட்சி சுற்றறிக்கை | சேவை பெறுனர்கள் இனையத்தினூடாக சேவைகளிற்கு விண்ணப்பிக்கும் போது சந்தர்ப்பம் வழங்குவதற்காக தேவையான வசதிகளை நிலை நிறுத்த சபையிற்கு இயலாதிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் செயற்பட்டு தேவையான வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | திறக்கப்பட்டுள்ளதாக வும் தொழிநுட்ப வசதிகளுடன் கூடிய பொது நூலகத்தை அன்மையில் திறக்கவிருப்பதாகவும் சேவை வழங்கையில் ஏனைய வசதிகளையும் எதிர்காலத்தில் வழங்க முடியுமெனவும் அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,698,546 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,922,465 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 9,064,500 | 8,475,917 | 10,418,688 | 3,742,527 | 8,398,900 | 8,849,065 | 7,735,275 | 5,946,338 |
| (ii) | வாடகை | 2,531,575 | 1,250,905 | 1,285,740 | 178,408 | 2,591,990 | 1,891,521 | 1,472,020 | 183,158 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,838,200 | 1,434,054 | 1,434,054 | - | 1,160,250 | 1,469,208 | 1,454,908 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 13,235,800 | 24,237,759 | 20,966,583 | 11,884,326 | 9,536,000 | 8,275,405 | 11,880,508 | 8,043,012 |
| | | 26,670,075 | 35,398,635 | 34,105,065 | 15,805,261 | 21,687,140 | 20,485,199 | 22,542,711 | 14,172,508 |

### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரி** | | |
| | மீளாய்வாணடு இறுதியில் ரூபா 3,652,850 ஆன நிலுவை வீத வரி மீதியினுள் 05 ஆண்டுகளை விஞ்சிய காலத்திலிருந்து நிலவி வரும் ரூபா 2,673,569 உள்ளடங்கி இருந்தது. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | வீதவரி விதிக்கையில் ஏற்பட்டுள்ள சிக்கலான நிலைமையின் மீது ஒரு பகுதியை பதிவழிக்க கோரியுள்ளதாகவும், மீதி நிலுவையை அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | **ஏக்கர் வரி** | | |
| | மீளாய்வாணடு இறுதியில் ரூபா 81,677 ஆன நிலுவை ஏக்கர் வரி மீதினுள் 05 வருடங்களை விஞ்சிய காலத்திலிருந்து நிலவி வரும் ரூபா 67,870 உள்ளடங்கி இருந்தது. | ஏக்கர் வரி ஒப்பாய்வொன்றை மேற்கொண்டு நிலுவை வருமானத்தை தீர்த்துக்கொள்ள வேண்டும். | ஒப்பாய்வொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாணசபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்து 2019 திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டியதாக இனங்காணப்பட்ட நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,242,833 உம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 2,578,815 உமானது. | சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | முத்திரைக் கட்டணம் அட்டவணை தயாரித்து முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் நீதிமன்ற தண்டப்பண வருமானத்தை தற்போது இனங்கண்டுள்ளதாகவும் அறிவிக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) செயல் நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும், அதிகார எல்லையில் அபிவிருத்தி மற்றும் பொது மக்களிற்கு வழங்கும் நலன்புரி வசதிகளை மேன்படுத்தல் தொடர்பான உத்தேசங்கள் எதுவும் அத் திட்டத்திற்கு உட்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | அதிகார எல்லையில் அபிவிருத்தி மற்றும் நலன்புரி வசதிகளை வழங்குவதற்கான உத்தேசம் செயல் நடவடிக்கை திட்டத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும். | ஏற்பட்டுள்ள பழவினங்கள் கழைந்து முன் திட்டங்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**(ஆ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் இயற்கை பசளை உற்பத்தி கருத்திட்டமொன்று ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருந்த பொதும், மீளாய்வாண்டினுள் அக் கருத்திட்டத்தை நடைமுறைபடுத்த சபையினால இயலாமலிருந்தது. | ஒதுக்கீடு ஏற்படுத்திக் கொண்டு உரிய கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் | சபையில் நிலவும் நிதி நிலைமையின் மீது கருத்திட்டமொன்று நடைமுறைப்படுத்த இயலாமலிருந்ததாகவும்வேறு மூலங்மொன்றின் மூலம் ஒதுக்கீட்டை பெற்று ஆரம்ப மட்ட வேலைத் திட்டம் ஒன்றை செயற்படுத்த முயற்சிப்பதாகவும் அறிவிக்கிறேன். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் பற்றி சபை அறிந்திருந்த போதும் அந் நோக்கத்திற்கான உலகலாவிய குறிகாட்டிகளினூடாக சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட கால திட்டம் 2019 திசெம்பர் வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும். | 2020 ஆண்டிற்காக நிலைபேறான அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் நடைமுறைப்படுத்தும் 05 நீர் திட்டங்களில் 02 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நீர் மாணிகள் செயலிழந்துள்ள 166 நுகரிவோரிகளிடமிருந்து நிலையான கட்டணம் மாதிதிரம் அறவிடப்படுவதுடன் செயலிழந்துள்ள மாணிகளை திருத்த அல்லது புதிய மாணிகளை பொருத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நீர் மாணிகளை பொருத்தி கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபை நிதியம் போதாமையால் நீர் விநியோக சபையினூடாக நீர் மாணிகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | 2017 ஆண்டில் மற்றும் 2019 ஆண்டில் ஏற்பட்டிருந்த மூன்று வாகன விபத்துக்கள் தொடர்பாக காப்புறுதி மூலம் மீள்நிரப்பப்படாத கூட்டுத் தொகை ரூபா 43,217 நட்டம் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சாரதிகளிடமிருந்து அறிவட வேண்டி இருப்பின் அறவிடவும், கணக்கு பதிவழிக்கவும் நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**ஊழியர் கடன்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 06 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலுவையாக உள்ள நான்கு அலுவலர்களுக்குரிய ரூபா 82,450 ஆன கடன் மீதியை தீர்த்துக் கொண்டிருக்கவில்லை. | கடன் மீதியை தீர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | அவ்வப்போது அறிவூட்டப்பட்ட போதும் அறவிட முடியாமலிருந்ததாகவும் மேலும் நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் இனங்காணப்பட்டிருந்த 03 அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்கு அல்லது சட்டரீதியாக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக முறையாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | சகல புதிய நிர்மாணங்களும் சபையின் அங்கிகாரத்துடன் நிர்மாணிக்க வேண்டும் என ஒலிபெருக்கி மூலம் பொது மக்களை அறிவூட்ட செயற்பட்டுள்ளதாகவும் கண்டறிந்து முன் நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துக்கள் ஆவணப்படுத்தப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 62,978,721 ஆன நடைமுறையல்லாத சொத்துக்கள் சபைக்கு சொந்தமாக இருந்த போதும் அது தொடர்பான சொத்துக்கள் பதிவேடு நாளாதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை . | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளாதுவரையாக பேணப்பட வேண்டும். | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்படுவதும், குறைகள் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### 3.5.2 பராமரிப்பு மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஓட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்ட 05 வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறித்த வாகனங்களை திருத்துவதற்கு அல்லது பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்க வெண்டும். | 02 வாகனங்களை ஏழவிற்பனை செய்ய தர அறிக்கையொன்று பெற்றுள்ளதாகவும், எஞ்சிய வாகனங்கள் சபை தீர்மானம் மீது ஏழவிற்பனை செய்ய அல்லது திருத்த நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### 3.5.3 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை பயன்படுத்தும் 04 வாகனங்களை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபை பயன்படுத்தும் வாகனங்களை சுவீகரித்துக் கொள்ள வேண்டும். | கண்டறிந்து நடவடிக்கை எடப்பதாக அறிவிக்கிறேன். |

### 3.5.4 விளைவற்ற/குறைப்பயன்பாட்டு சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கழிவுகளை அகற்ற முறையான வேலைத்திட்டமொன்று சபைக்கு இல்லாததனால் 2014 ஆண்டின் போது சபைக்கு கிடைத்திருந்த கலி பவுசர் சபை வளவினுள் விளைவற்றதாக நிலவியது. | கலி பவுசரை உபயோகிக்க அல்லது தேவையுடன் கூடிய உள்ளூராட்சி நிறுவனமொன்றிற்கு வழங்கவேனும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உத்தேச மல சல தொகுதியொன்றை செயற்படுவதுடன் கலி பவுசரை பிரயோசனப்படுத்த முடியுமென அறிவிக்கிறேன். |

3.6 பெறுகைகள்

**வழங்கல்கள் மற்றும் சேவைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 3.4.1(ஆ) வழிகாட்டி ஏற்பாடுகளிற்கு முரணாக குறைந்தப்பச்சம் 03 நிறுவனங்களிலிருந்து விலை மணு கோராது ரூபா 193,158 செலவில் 05 உருக்கு கபட்கள் மற்றும் வளிப்பதனாக்கி இயந்திரமொன்றும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | பண்டங்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும் போது பெறுகைகள் வழிகாட்டி கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | முகவர் நிறுவனமொன்றாக செயற்படும் தம்றோ நிறுவனத்தினால் விற்பனை நிலையங்களிலிருந்து விலை மணு கோரி வழங்கியதன் பின்னர் அவற்றில் குறைந்த விலை முன்வைத்திருந்த நிறுவனத்திலிருந்து உருக்கு கபட்களை கொள்வனவு செய்தததாக அறிவிக்கிறேன். |

4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

**தீர்க்கப்படாத அவதானிப்புக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2009 மார்ச் 09 திகதிய 2009/01 இலக்க உள்ளூராட்சி ஆணையாளர் சுற்றறிக்கையின் 05 பந்தி பிரகாரம் குறைந்தபட்சம் 05 வருடங்களிற்கு ஒரு முறையாவது மதிப்பீட்டு குத்தகை வரியை திருத்த வேண்டிய போதும், 14 கடையறைகளின் குத்தகை வரி அவ்வாறு திருத்தப்பட்டிருக்கவில்லை. | 05 ஆண்டுகளிற்கு ஒரு முறை குத்தகை ஆதனங்களை மதிப்பிட்டு குத்தகை வரியை திருத்த வேண்டும். | ஓப்பநாயக கடையறைகளின் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் , எஞ்சிய கடையறைகளை மதிப்பிட நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |
| (ஆ) | 2016 ஆண்டு பண்டக கணிப்பீடின் போது இனங்காணப்பட்ட ரூபா 43,250 பெறுமதியான 36 அலகு பண்டக பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பண்டக பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | அன்றிருந்த அலுவலர்களை விசாரித்து நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |